


admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்





| Vol: 03 | Issue: 117 | 4 Pages | 26.11.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 117 | 4 பக்கங்கள் | 26.11.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்**
**கில்லைநன் றாகா வினை**

**விளக்கம்: மனம் தூய்மையாகப் பெற்றவர்க்கு , அவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலியவை நன்மையாகும், இனம் தூய்மையாக உள்ளவர்க்கு நன்மையாகாத செயல் இல்லை.**

## எத்தியோப்பியாவில் வெடித்த எரிமலை: இந்திய நகரங்களை சூழ்ந்த சாம்பல்.. விமான சேவை பாதிப்பு



புதுடெல்லி, நவ.26

கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு எத்தியோப்பியா. இந்நாட்டின் அபார் மாகாணத்தில் ஹேலி குப்பி என்ற எரிமலை உள்ளது. எரித்திரியா நாட்டின் எல்லை அருகே இந்த எரிமலை அமைந்துள்ளது. இதனிடையே, ஹேலி குப்பி எரிமலை கடந்த 10 ஆயிரம் ஆண்டுகளாக எந்தவித வெடிப்பும் இன்றி அமைதியான இருந்து வந்தது. இந்நிலையில், 10 ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் முதல் முறையாக ஹேலி குப்பி எரிமலை நேற்று வெடித்து சிதறியது. எரிமலையில் இருந்து பல கிலோ மீட்டர் தூரத்திற்கு கரும்புகை வெளியேறி வருகிறது. எரிமலை வெடிப்பால் லாவா எரிமலை குழம்பும் வெளியேறி வருகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் 10,000 ஆண்டுகளுக்குப் பிறகு வெடித்துச்சிதறிய எரிமலையில் இருந்து வெளியேறிய சாம்பல் வளிமண்டலத்தில் பரவி செங்கடல், ஏமன், ஓமன் வழியாக, சுமார் 4,000 கி.மீ. தூரம் நகர்ந்து இந்தியாவை நோக்கி மணிக்கு 120 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகின்றன

இந்த சாம்பல் குஜராத் மாநிலத்திற்குள் நுழைந்து ராஜஸ்தான், மேற்கு மகாராஷ்டிரா, டெல்லி, அரியானா, பஞ்சாப் நோக்கி இரவு 10 மணிக்குள் நகரும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே காற்று மாசால் பாதிக்கப்பட்டுள்ள டெல்லி, ராஜஸ்தான், அரியானா, பஞ்சாப் வான் பரப்பில் சாம்பல் படர்ந்ததால் விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மேகங்கள், எரிமலைச் சாம்பல், சல்பர் டை ஆக்சைடு மற்றும் சிறிய பாறைத் துகள்கள் ஆகியவற்றைக் கொண்டவை. இவை பூமியின் மேற்பரப்பிலிருந்து சுமார் 10 முதல் 15 கி.மீ உயரம் வரை வளிமண்டலத்தில் பரவியுள்ளன. இந்த உயரத்தில் வணிக விமானங்கள் பறப்பதால், விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்படும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

## வந்தே பாரத் ரெயிலில் அடிபட்டு நர்சிங் மாணவர் மாணவி பலி: தற்கொலை செய்தனரா? போலீஸ் விசாரணை



பெங்களூரு, நவ.26

கர்நாடக மாநிலம் பெங்களூரு சிக்கபானவரா ரெயில் நிலையத்தின் அருகே தண்டவாளத்தில் இளம்பெண், வாலிபர் பிணமாக கிடந்தனர். அவர்கள் ரெயிலில் அடிபட்டு உயிரிழந்தது தெரியவந்தது. இதுகுறித்து தகவல் அறிந்ததும் யஷ்வந்தபுரம் ரெயில்வே போலீசார் விரைந்து சென்று பார்வையிட்டனர்.

அப்போது 2 பேரும் பெலகாவியில் இருந்து பெங்களூரு நோக்கி வந்த வந்தே பாரத் ரெயிலில் அடிபட்டு பலியானது தெரியவந்தது. இதையடுத்து 2 பேரின் உடலையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் இதுகுறித்து ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர்.

இதில் பலியானவர்கள் கேரளாவில் உள்ள பத்தனம்திட்டாவை சேர்ந்த ஜஸ்டின் ஜோசப் (வயது 20), ஸ்டெர்லின் எலிசா சாஜி (19) என்பதும் இவர்கள் 2 பேரும் நண்பர்களாக பழகி வந்ததும் தெரிய வந்தது. இவர்கள் 2 பேரும் சிக்கபனாவாரா பகுதியில் உள்ள விடுதியில் தங்கி, கல்லூரி ஒன்றில் நர்சிங் முதலாம் ஆண்டு படித்து வந்தனர். இந்தநிலையில் இவர்கள் நேற்று முன்தினம் மதியம் வெளியில் சென்றுள்ளனர். அதன்பின்னர் தான் அவர்கள் ரெயிலில் அடிபட்டு உயிரிழந்துள்ளனர். அவர்கள் 2 பேரும் வெளியே சென்றுவிட்டு விடுதிக்கு திரும்பும் வழியில் தண்டவாளத்தை கடக்க முயன்ற போது ரெயில் மோதி பலியானார்களா? அல்லது அவர்கள் தற்கொலை செய்து கொண்டனரா? என்பது தெரியவில்லை. இதுதொடர்பாக போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். மேலும் வந்தே பாரத் ரெயிலில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்த பின்னர் கூடுதல் தகவல் தெரியவரும் என்று ரெயில்வே போலீசார் தெரிவித்துள்ளனர்.

## "ஆண்பெண் உறவின் போது ஏற்படும் உடல் ரீதியான நெருக்கம்.." திருமணம் குறித்து சுப்ரீம் கோர்ட்டு பரபரப்பு கருத்து

புதுடெல்லி, நவ.26

மராட்டியத்தை சேர்ந்த பெண் ஒருவர், வக்கீல் ஒருவருடன் 3 ஆண்டுகளாக நெருங்கி பழகினார். அப்போது அந்த பெண்ணை திருமணம் செய்ய வக்கீல் விருப்பம் தெரிவித்தார். ஆனால் அந்த பெண்ணின் முந்தைய திருமணத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தால் திருமணத்துக்கு பெண் மறுப்பு தெரிவித்தார். எனினும் இருவரும் நெருங்கி பழகியதில் பெண் கர்ப்பமடைந்தார். பின்னர் அதை கலைத்தார். பின்னர் திருமணம் செய்ய வக்கீலிடம் வற்புறுத்திய போது, அவர் மறுப்பு தெரிவித்தார். இதைத்தொடர்ந்து அவர் மீது சத்ரபதி சாம்ராஜ்நகர் போலீசில் பாலியல் வன்கொடுமை புகார் அளித்தார். இந்த வழக்கை தள்ளுபடி செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மும்பை ஐகோர்ட்டு நிராகரித்தது. எனவே சுப்ரீம் கோர்ட்டில் வக்கீல் மேல்முறையீடு செய்தார். இந்த மனுவை நீதிபதிகள் நாகரத்னா, மகாதேவன் அமர்வு நேற்று விசாரித்தது. பின்னர் வக்கீல் மீது தொடரப்பட்ட பாலியல் வன்கொடுமை வழக்கை ரத்து செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். அத்துடன் இதுபோன்ற தோல்வி அடைந்த ஆண்பெண் உறவுகளில் பாலியல் வன்கொடுமை சாயம் பூசுவது கண்டனத்துக்குரியதும், கவலைக்குரியதும் ஆகும் என தெரிவித்த நீதிபதிகள், குற்றவியல் நீதி எந்திரத்தை தவறாக பயன்படுத்துவது கண்டனத்துக்குரியது என்றும் காட்டமாக தெரிவித்தனர். ஒவ்வொரு கசப்பான உறவையும் கற்பழிப்பு குற்றமாக மாற்றுவது குற்றத்தின் தீவிரத்தை அற்பமாக்குவது மட்டுமின்றி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு அழிக்க முடியாத களங்கத்தையும்,, கடுமையான அநீதியையும் ஏற்படுத்துகிறது எனவும் சாடினர். பாலியல் வன்கொடுமை என்பது மிகவும் கடுமையான வகையைச் சேர்ந்தது என்பதால், உண்மையான பாலியல் வன்முறை, வற்புறுத்தல் அல்லது சுதந்திரமான ஒப்புதல் இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டுமே அது பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர். நீதிபதிகள் மேலும் கூறுகையில், 'ஆண்பெண் உறவின் போது ஏற்படும் உடல் ரீதியான நெருக்கத்தை, அந்த உறவு திருமணத்தில் உச்சத்தை அடையத் தவறியதால், பின்னோக்கிப் பார்க்கும்போது பாலியல் வன்கொடுமை குற்றமாக முத்திரை குத்த முடியாது. ஆனால் நம்பிக்கை மீறப்பட்டு கண்ணியம் மீறப்பட்ட உண்மையான வழக்குகளுக்கு சட்டம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்' என்றும் குறிப்பிட்டனர். தோல்வியடைந்த அல்லது உடைந்த உறவுகளுக்கு குற்றச்சாயல் கொடுக்கப்படும் கவலையளிக்கும் போக்கை இந்த கோர்ட்டு பல சந்தர்ப்பங்களில் கவனத்தில் கொண்டுள்ளது என்றும் வருத்தத்துடன் கூறினர்.

# கோவையில் முதலீட்டாளர்கள் மாநாடு: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தொடக்கம்

கோயம்புத்தூர் நவ.26

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கோவை சென்றுள்ளார். அவர் காந்திபுரத்தில் 208 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோவை செம்மொழி பூங்காவை திறந்து வைத்தார். பின்னர், செம்மொழி பூங்காவில் உள்ள கலையரங்கில் பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் கோவையை சேர்ந்த தொழில் அதிபர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் உள்பட 150 பேருடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார்.




இந்நிலையில், தமிழ்நாடு தொழில்துறை சார்பில் டி.என். ரைசிங் என்ற நிகழ்ச்சி கோவையில் முதலீட்டாளர்கள் மாநாடு இன்று நடைபெற்று வருகிறது. இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கி தொடங்கி வைத்துள்ளார்.

இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ. 43 ஆயிரத்து 843 கோடி முதலீடுகளை ஈர்க்கும் வகையில் 158 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த ஒப்பந்தங்கள் மூலம் 1 லட்சத்து 709 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

# திருவள்ளூர் மாவட்டம்,ஆவடி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 377 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார்

திருவள்ளூர்மாவட்டம்,ஆவடி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ரூ.333.26 கோடி மதிப்பீட்டில் 377 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து,

ரூ.137.38 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி. 1,12,294 பயனாளிகளுக்கு ரூ.1000.34 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள்வழங்ககினார்கள்.உடன்அமைச்சர் சாமு.நாசர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப்,சசிகாந்த் செந்தில் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள்,



கிருஷ்ணசாமி,க. கணபதி, ராஜேந்திரன்,துரை சந்திரசேகர்,சங்கர், சுதர்சனம்,சந்திரன், கோவிந்தராஜ் மற்றும் மாவட்ட செயலாளர் ரமேஷ்ராஜ்,திருவேற்காடு தலைவர் என்.இ.கே.மூர்த்தி, மாநில இளைஞரணி செயலாளர் பிரபு கஜேந்திரன்,ஒன்றிய செயலாளர் கமலேஷ்,ஜெயசீலன், தலைவர்கள் காஞ்சனா சுதாகர், ஸ்ரீதர்,மகாதேவன், முனுசாமி,மாவட்டத் துணைச் செயலாளர் காயத்ரி,டிஆர்ஓ. சுரேஷ்,நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை,ராஜேந்திரன்,நாராயணன் சாமி, சன் பிரகாஷ்,பேபி சேகர்,உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கார்த்திகை தீப திருவிழா: திருவண்ணாமலைக்கு சிறப்பு ரெயில்கள்

சென்னை நவ.26

கார்த்திகை தீப திருவிழாவையொட்டி, கூட்ட நெரிசலை தவிர்க்க திருவண்ணாமலைக்கு சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திருநெல்வேலியில் இருந்து டிசம்பர் 3ந் தேதி இரவு 9.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06075) மறுநாள் காலை 8.30 மணிக்கு திருவண்ணாமலையை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில் திருவண்ணாமலையில் இருந்து 4ந் தேதி இரவு 7.55 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06076) மறுநாள் காலை 8.30 மணிக்கு திருநெல்வேலியை சென்றடைகிறது.

இதேபோல் சென்னை சென்டிரலில் இருந்து சென்னை கடற்கரைக்கு வெளிவட்ட ரெயில் (06051) இயக்கப்படுகிறது. டிசம்பர் 3 மற்றும் 4ந் தேதிகளில் காலை 9.15 மணிக்கு சென்னை சென்டிரலில் இருந்து புறப்படும் இந்த ரெயில் அரக்கோணம், காட்பாடி, திருவண்ணாமலை, விழுப்புரம், தாம்பரம் வழியாக இரவு 7 மணிக்கு சென்னை கடற்கரையை வந்தடைகிறது.

மேலும் விழுப்புரத்தில் இருந்து நவம்பர் 30, டிசம்பர் 3, 4, 5ந் தேதிகளில் காலை 10.10 மணிக்கு புறப்படும் முன்பதிவில்லாத மெமு ரெயில் அன்று காலை 11.45 மணிக்கு திருவண்ணாமலையை சென்றடையும். மறுமார்க்கத்தில், திருவண்ணாமலையில் இருந்து நவம்பர் 30, டிசம்பர் 3, 4, 5ந் தேதிகளில் பகல் 12.40 மணிக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில் அன்று மதியம் 2.15 மணிக்கு விழுப்புரத்தை சென்றடைகிறது.

இதேபோல் விழுப்புரத்தில் இருந்து டிசம்பர் 3, 4, 5 ஆகிய தேதிகளில் இரவு 10.40 மணிக்கு புறப்படும் முன்பதிவில்லாத மெமு ரெயில் அன்று நள்ளிரவு 1.45 மணிக்கு வேலூர் கண்டோன்மெண்டை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில் வேலூர் கண்டோன்மெண்டில் இருந்து டிசம்பர் 4, 5, 6ந் தேதிகளில் நள்ளிரவு 2.05 மணிக்கு புறப்படும் முன்பதிவில்லாத மெமு ரெயில்அன்றுகாலை5மணிக்குவிழுப்புரத்தை சென்றடைகிறது.

மேலும் தாம்பரத்தில் இருந்து டிசம்பர் 3, 4ந் தேதிகளில் காலை 9.15 மணிக்கு புறப்படும் முன்பதிவில்லாத மெமு ரெயில் அன்று மதியம் 1.30 மணிக்கு திருவண்ணாமலையை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில் திருவண்ணாமலையில் இருந்து 3, 4ந் தேதிகளில் மாலை 5 மணிக்கு புறப்படும் முன்பதிவில்லாத மெமு ரெயில் அன்று இரவு 9 மணிக்கு தாம்பரத்தை சென்றடைகிறது.

இதில் முன்பதிவு வசதி கொண்ட ரெயில்களுக்கு நாளை (புதன்கிழமை) காலை 8 மணிக்கு முன்பதிவு தொடங்குகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# கந்தூரி விழா: சென்னை, விழுப்புரத்தில் இருந்து நாகைக்கு சிறப்பு ரெயில்கள்

சென்னை நவ.26

கந்தூரி விழாவையொட்டி, கூட்ட நெரிசலை தவிர்க்க நாகப்பட்டினத்திற்கு சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றன. இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:



சென்னைவேளாங்கண்ணி:

சென்னை எழும்பூரில் இருந்து இம்மாதம் 30ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.45 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 06137) அதே நாள் மாலை 5.30 மணிக்கு வேளாங்கண்ணியை சென்றடைகிறது.

மறுமார்க்கத்தில் இந்த ரெயில் (06138) டிசம்பர் 1ந் தேதி (திங்கட்கிழமை) காலை 7.30 மணிக்கு வேளாங்கண்ணியில் இருந்து புறப்பட்டு அதே நாள் மதியம் 3.15 மணிக்கு சென்னை எழும்பூரை வந்தடைகிறது.

விழுப்புரம் நாகை:

இதேபோல் விழுப்புரத்தில் இருந்து இம்மாதம் 30ந் தேதி காலை 9.10 மணிக்கு புறப்படும் முன்பதிவில்லாத மெமு எக்ஸ்பிரஸ் அதே நாள் மதியம் 1.05 மணிக்கு நாகப்பட்டினத்தை சென்றடைகிறது. மறுமார்க்கத்தில் நாகப்பட்டினத்தில் இருந்து அதேநாள் மதியம் 1.20 மணிக்கு புறப்படும் இந்த ரெயில் அன்று மாலை 5.30 மணிக்கு விழுப்புரத்தை சென்றடைகிறது.

சென்னை எழும்பூர்வேளாங்கண்ணி இடையேயான சிறப்பு ரெயிலுக்கான முன்பதிவு நாளை (புதன்கிழமை) காலை 8 மணிக்கு தொடங்குகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 59 சதவீதம் எஸ்.ஐ.ஆர் படிவங்கள் ஆன்லைனில் பதிவேற்றம்



சென்னை, நவ.26

பீகாரைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி கடந்த 4ந் தேதி தொடங்கி நடந்து வருகிறது. அடுத்த ஆண்டு (2026) சட்டமன்றத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணியில் அரசியல் கட்சியினரும் தீவிரம் காட்டி வருகிறார்கள். வீடு வீடாகபடிவங்கள்கொடுக்கப்பட்டு அதில் வாக்காளர்கள் தங்களது புகைப்படத்தை ஒட்டி அலுவலர்களிடம் ஒப்படைத்து வருகிறார்கள். அடுத்த மாதம் (டிசம்பர்) 4ந் தேதியுடன் இந்தப்பணியை நிறைவு செய்ய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டு உள்ளது. இன்னும் 9 நாட்களே உள்ள நிலையில் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

இந்தநிலையில்,

★ தமிழகத்தில் 6.19 கோடி வாக்காளர்களின் எஸ்.ஐ.ஆர். படிவங்கள் 96.85 சதவீதம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

★ தமிழகத்தில் 3.78 கோடி வாக்காளர்களின் எஸ்.ஐ.ஆர் படிவங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

★ லட்சத்தீவில் 99.33 சதவீதம், கோவாவில் 82.67 சதவீதம் வாக்காளர்களின் படிவங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

★ எஸ்.ஐ.ஆர் பணிகள் நடக்கும் 12 மாநிலங்களில் மொத்தமாக 56.34 சதவீத பேரின் படிவங்கள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

என தேர்தல் கமிஷன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர்மணியாச்சி இடையே பாலக்காடு எக்ஸ்பிரஸ் ரெயில் 4 நாட்கள் பகுதியாக ரத்து



சென்னை, நவ.26

தென்னக ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திருச்செந்தூரில் இருந்து தினந்தோறும் பாலக்காடு செல்லும் முன்பதிவில்லாத பயணிகள் எக்ஸ்பிரஸ் ரெயில், இரட்டை ரயில் பாதை அமைக்கும் பணி காரணமாக இன்று (நவம்பர் 25) முதல் நவம்பர் 29ம் தேதி வரை வாஞ்சிமணியாச்சி திருச்செந்தூர் இடையே பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. திருச்செந்தூர் பாலக்காடு எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்: 16732) பாலக்காடு திருச்செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்: 16731) ஆகிய 2 ரெயில்களும் நவம்பர் 25, 26, 28, 29 ஆகிய 4 நாட்கள் வாஞ்சி மணியாச்சிதிருச்செந்தூர் இடையே பகுதியளவு ரத்து செய்யப்படுகிறது. இந்த நாட்களில் இந்த ரெயிலானது மணியாச்சியிலிருந்து மதியம் 2 மணிக்கு பாலக்காடு புறப்பட்டுச் செல்லும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நாளை சார் பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் டோக்கன் ஒதுக்கீடு




சென்னை நவ.26

பதிவுத்துறை தலைவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல்முன்பதிவுவில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது கார்த்திகை மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினமான 27.11.2025 அன்று கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே. கார்த்திகை மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினமான 27.11.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும்.

12 தட்கல் முன்பதிவு கூடுதலாக தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கொடியேற்றம்



தஞ்சாவூர், நவ.26

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் நான்காம் படை வீடாக போற்றப்படும் சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை தீபத்திருவிழா 11 நாட்களுக்கு சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

அதுபோலஇந்த ஆண்டு கார்த்திகை தீபத்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி, வள்ளி, தெய்வானை சமேத சண்முகசுவாமி சிறப்பு மலர் அலங்காரத்தில், விநாயகர் மற்றும் சண்டிகேஸ்வரருடன் தங்க கொடிமரம் அருகே எழுந்தருளினார்.

பின்னர், கொடிமரத்திற்கு பால், தயிர், மஞ்சள், திரவிய பொடி, சந்தனம், உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு அபிஷேக ஆராதனைகள் செய்து வேலுடன் கூடிய யானை சின்னம் பொறிக்கப்பட்ட திருக்கொடி ஏற்றப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. சுவாமிகளுக்கும் கோபுர ஆர்த்தி செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். விழா நாட்களில் நாள்தோறும் பல்வேறு வாகனங்களில் சுவாமி பிரகார உலா நடைபெறுகிறது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக திருக்கார்த்திகை அன்று (3.12.2025 புதன்கிழமை) திருத்தேரோட்டம், இரவு தங்க மயில் வாகனத்தில் பிரகார உலாவும், அதனை தொடர்ந்து கார்த்திகை தீபக்காட்சியும் நடைபெறுகிறது. கொடியேற்றத்தை முன்னிட்டு மூலவர் சுவாமிநாத சுவாமி தங்க கவச அலங்காரத்தில் வைர வேலுடன் அருள்பாலித்தார். நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோவில் தக்கார் சுவாமிநாதன், இந்து சமய அறநிலைத்துறை கோவில் உதவி ஆணையர் உமா தேவி மற்றும் திருக்கோவில் கண்காணிப்பாளர்கள், பணியாளர்கள் செய்திருந்தனர்.

# மழையில் சேதமடைந்த 2 லட்சம் ஏக்கர் நெல் பயிர்களுக்கு இழப்பீடு எங்கே? அன்புமணி கேள்வி

சென்னை, நவ.26

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை நடப்பாண்டில் முன்கூட்டியே தொடங்கிய நிலையில் கடந்த அக்டோபர் 20, 21 ஆகிய தேதிகளில் பெய்த மழையில் காவிரி பாசன மாவட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த குறுவைப் பயிர்களும், நடவு செய்யப்பட்டிருந்த சம்பா மற்றும் தாளடி பயிர்களும் சேதமடைந்தன. அதை சுட்டிக்காட்டி பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று அக்டோபர் 22ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில் வலியுறுத்தியிருந்தேன். அதே நாளில் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய வேளாண் துறை அமைச்சர், பாதிக்கப்பட்ட பயிர்கள் கணக்கெடுக்கப்பட்டு இழப்பீடு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

ஆனால், அதன்பின் 35 நாள்களாகியும்மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை. மழையால் பாதிக்கப்பட்ட குறுவை பயிர்களில் விளைச்சல்பாதிக்கும்கீழ்குறைந்துவிட்டது. அதேபோல், சம்பா மற்றும் தாளடி பயிர்களை ஒரு லட்சம் ஏக்கருக்கும் கூடுதலான பரப்பில் மறு நடவு செய்ய நேரிட்டது. அதனால் உழவர்களுக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், அதை ஈடு செய்ய வேண்டியது கட்டாயம் ஆகும். ஆனால், அந்த கடமையை செய்ய திமுக அரசு தவறுகிறது.

பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுக்கும் பணி இன்னும் முடிவடையவில்லை என்று சொல்லி அரசு தப்பித்துக் கொள்ள முடியாது. மழை பாதிப்புகளை கணக்கிட 35 நாள்கள் என்பது மிக அதிக காலம் ஆகும். தமிழக அரசிடம் உள்ள தொழில்நுட்பம், மனிதவளம் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும் போது இக்கணக்கெடுப்பை எப்போதோ நடத்தி முடித்திருக்க முடியும். ஆனால், பயிர்களுக்கான இழப்பீடு குறித்து இதுவரை எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. இதன் பின்னணியில் உழவர்களுக்கு எதிரான சதி இருப்பதாகவே தோன்றுகிறது.

அக்டோபர் மாதம் பெய்த மழையில் 2 லட்சம் ஏக்கருக்கும் கூடுதலான நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டதாக உழவர் அமைப்புகள் கூறியுள்ளன. அக்டோபர் 22ம் தேதி சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய வேளாண் துறை அமைச்சர், 16 ஆயிரம் ஹெக்டேர், அதாவது 40 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் மழையில் மூழ்கி விட்டதாக தெரிவித்திருந்தார். அதன்பின் சில நாள்கள் கழித்து அதிகாரிகள்தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்ட செய்தியில் 14 ஆயிரம் ஹெக்டேர், அதாவது 35 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்படியாக முன்னுக்குப் பின் முரணான தகவல்களை அளித்து, ஒரு கட்டத்தில் பயிர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்ற நாடகத்தை அரங்கேற்ற திமுக அரசு திட்டமிட்டிருக்கிறதோ? என்று எண்ணத் தோன்றுகிறது. உழவர்களுக்கு துரோகம் செய்வதையே வாடிக்கையாகக் கொண்ட திமுக அரசு, அவர்களை ஏமாற்ற எந்த எல்லைக்கும் செல்லக்கூடும். இதற்கு கடந்த காலங்களில் ஏராளமான எடுத்துக் காட்டுகள் உள்ளன.

காவிரி பாசன மாவட்டங்களில் ஒன்றான மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் நடப்பாண்டு ஜனவரி மாதத்தில் பெய்த கன மழையில் ஒன்றரை லட்சம்ஏக்கருக்கும்கூடுதலான நெற்பயிர்கள் சேதமடைந்தன. ஆனால், மழையால் பாதிக்கப்பட்டபயிர்களை ஆய்வு செய்த அதிகாரிகள் மொத்தம் 1.05 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றுக்கு ரூ.71.79 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு பரிந்துரைத்தனர். அந்த இழப்பீட்டைக் கூட தமிழக அரசு இன்னும் வழங்கவில்லை.

உழவர்களின் நலன்களை பாதுகாப்பதற்காகவே திமுக அரசு அவதாரம் எடுத்து வந்திருப்பதாக ஆட்சியாளர்கள் அவர்களாகவே போலி புகழுரைகளை சூடிக் கொள்வார்கள். ஆனால், உழவர்கள் நலனுக்காக துரும்பைக் கூட அசைக்க மாட்டார்கள். நெல், கரும்பு உள்ளிட்ட விளைபொருள்களுக்கு மிகக் குறைந்த கொள்முதல் நிலை நிர்ணயித்தது, கொள்முதலுக்காககொண்டுவரப்பட்ட நெல் மூட்டைகளை சரியான நேரத்தில் கொள்முதல் செய்யாமல் மழையில் நனையவிட்டு பாதிப்பை ஏற்படுத்தியது, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாதது என உழவர்களுக்கு திமுக அரசு செய்த துரோகங்களின் பட்டியல் மிகவும் நீளமானது.

காவிரி பாசன மாவட்டங்களில் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை என்றால், விவசாயிகள் கடனாளிகளாக மாறி விடுவார்கள். கடன் தான் விவசாயிகளின் தற்கொலைகளுக்கு முதன்மைக் காரணமாக அமைகிறது. மழையில் நனைந்து சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்காததன் மூலம் உழவர்களை திமுக அரசே கடன் வலையில் வீழ்த்தி விடக் கூடாது. எனவே, மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மக்கள் விரும்பும் கூட்டணியை அமைப்போம் பிரேமலதா விஜயகாந்த் பேட்டி



நீலகிரி, நவ.26

நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ளம் தேடி இல்லம் நாடி தேர்தல் பிரசாரத்திற்காக வந்துள்ள தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் படுகர் இன மக்களின் பாரம்பரிய உடை அணிந்து பாரம்பரிய இசைக்கு அவர்களுடன் உற்சாகமாக நடனமாடி மகிழ்ந்தார். அதனை தொடர்ந்து

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

தமிழ்நாட்டில் வடமாநிலத்தோருக்கு வாக்குரிமை வழங்கினால் மக்கள் புரட்சி வெடிக்கும். வடநாட்டினர் இங்கு (தமிழ்நாடு) வாருங்கள்.. வேலை பாருங்கள். வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். ஆனால் வாக்குரிமை என்பது அவரவர் பிறந்த மாநிலத்தில்தான் இருக்க வேண்டும். வெறும் மாநிலங்களவை சீட்டுக்காக கூட்டணி அமைக்க மாட்டோம். தொண்டர்கள், மக்கள் விரும்பும் கூட்டணியை தேமுதிக அமைக்கும். இந்த வெற்றியை கேப்டன் காலடியில் கொண்டுபோய் சேர்ப்போம். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது. எல்லா மாவட்டங்களிலும் தொற்சாலைகள் வர வேண்டும். வேலை வாய்ப்பை உருவாக்கி தர வேண்டும். 2026க்கு பிறகு கேப்டனின் கனவுகள், லட்சியங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஸ்ரீவைகுண்டம் அணையை தூர்வார நடவடிக்கை: கனிமொழி எம்.பி. பேட்டி



தூத்துக்குடி, நவ.26

தாமிரபரணி ஆற்றில் கடந்த 2023ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது, ஏரல் உயர்மட்ட பாலத்தின் வடபகுதியில்இணைப்பு சாலை பலத்த சேதமடைந்தது. தற்போது அந்த பாலம் சீரமைக்கப்பட்டு போக்குவரத்து நடந்து வருகிறது. தற்போது ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டத்தில் பழைய பாலத்தை மூழ்கடித்து வெள்ளம் ஓடுகிறது. இதனால் அந்த பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

இதனையடுத்து நேற்று மாலையில் கனிமொழி எம்.பி. ஏரல் ஆற்றுப்பாலத்திற்கு வந்தார். அவர் உயர்மட்ட பாலம் மற்றும் தண்ணீரில் மூழ்கியுள்ள பழைய பாலத்தைபார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் ஆற்றுப்பாலத்திற்கு கீழ்புறம் மற்றும் மேல்புறம் வெள்ளநீர் ஊருக்குள் புகுந்துவிடாமல் தடுக்க பாலத்தின் அருகில் தடுப்பு சுவர் அமைத்து தர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். தொடர்ந்து அவர் அதிகாரிகளுடன் இதுகுறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆய்வின்போது ஒட்டப்பிடாரம் எம்.எல்.ஏ. சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் கலெக்டர் ஐஸ்வர்யா, ஸ்ரீவைகுண்டம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் கோட்டாளம், ஏரல் பேரூர் செயலாளர் ராயப்பன், ஏரல் பேரூராட்சி தலைவர் சர்மிளாதேவி மணிவண்ணன், வியாபாரிகள் சங்க செயலாளர் மணிவண்ணன், மாவட்ட பிரதிநிதி தியாகராஜன், பேரூராட்சி கவுன்சிலர்கள் முத்துமாரி, ஜவபாசாதிக, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் முத்துமாலை, மாவட்ட விவசாய தொழிலாளா அணி துணை அமைப்பாளர் பாலமுருகன். ஒன்றிய பொருளாளர் பத்திரகாளிமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து கனிமொழி எம்.பி., ஸ்ரீவைகுண்டம் தடுப்பணையை ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில், "தாமிரபரணி ஆற்றில் மழை வெள்ள பாதிப்புகள் ஏற்படாதவாறு முன்னேற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. ஆற்றில் தண்ணீர் வரத்து குறைந்த பிறகு ஸ்ரீவைகுண்டம் அணையை தூர்வாருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு மழைக்காலத்திலும் ஆதிச்சநல்லூர் அகழாய்வுநிகழ்விடம்மழையால் சேதம் அடைவது குறித்து பாராளுமன்றத்தில் பேசுவேன்" என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன்பெரியசாமி, ஸ்ரீவைகுண்டம் மேற்கு ஒன்றிய செயலாளர் கொம்பையா, தெற்கு மாவட்ட துணைத்தலைவர் ஆறுமுகப்பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அதிர்ச்சி சம்பவம்.. பல மாதங்களாக மன விரக்தியில் இருந்த பெண் போலீஸ் எடுத்த விபரீத முடிவு



சென்னை, நவ.26

சென்னை டி.பி.சத்திரம் போலீஸ் குடியிருப்பில் வசித்து வந்தவர்கார்த்திகா ராணி (வயது 30). இவர், சென்னை அண்ணா நகர் போலீஸ் நிலையத்தில் போலீசாக பணியாற்றி வந்தார். இவர், மணிவண்ணன் (34) என்பவரை திருமணம்செய்துகொண்டார். இவர்களுக்குஒரு மகளும், மகனும் உள்ளனர்.

கணவன் மனைவி இடையேஏற்பட்டகருத்து வேறுபாடு காரணமாக இருவரும் 2019ம் ஆண்டில் இருந்து பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களது 2 குழந்தைகளும், கார்த்திகா ராணியின் பெற்றோருடன் கொடைக்கானலில் வசித்து வருகின்றனர். மணிவண்ணன் தற்போது பெங்களூருவில் உள்ள ஒரு ஓட்டலில் வேலை பார்த்து வருகிறார்.

நேற்று முன்தினம் இரவு கார்த்திகா ராணி தனது அறையில் உள்ள மின்விசிறியில் சேலையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். அக்கம் பக்கத்தினர் கொடுத்த தகவலின்பேரில் சம்பவ இடத்துக்கு சென்ற டி.பி. சத்திரம் போலீசார் தற்கொலை செய்த கார்த்திகா ராணியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

கார்த்திகா ராணி, கணவர் பிரிந்து சென்றதால் பல மாதங்களாக மன விரக்தியில் இருந்ததாக கூறப்படுகிறது. இதனாலேயே தனியாக வசித்து வந்த அவர், தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக போலீசார் தெரிவித்தனர். மேலும் இதுபற்றி டி.பி. சத்திரம் போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

# திமுக கள்ள ஓட்டுகளையும், இறந்தவர்களையும் நம்பி இருக்கும் கட்சி: ஜெயக்குமார் விமர்சனம்



சென்னை, நவ.26

சென்னையில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களிடம் கூறியதாவது:

வாக்காளர் தீவிர திருத்த பட்டியல் பணியில் படிவங்கள் எவ்வாறு நிரப்ப வேண்டும்? என்பது குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறது. அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள வர்களுக்கு விண்ணப்ப படிவம் முறையாக வழங்கப்படவில்லை.

சென்னைக்கு மத்திய அரசு சார்பில் தேர்தல் பார்வையாளர்களை நியமித்து பணிகளை கண்காணிக்க வேண்டும். எஸ்.ஐ.ஆர். நல்ல நோக்கத்துக்காக கொண்டுவரப்பட்டது. அதை சிதைக்கும் வேலையை செய்யக்கூடாது. திமுக கள்ள ஓட்டுகளையும், இறந்தவர்களையும் நம்பி இருக்கும் கட்சி. காலம் காலமாக அவர்கள் அந்த வேலையை செய்தவர்கள்.

எஸ்.ஐ.ஆர். வருவதால் இறந்தவர்கள் பெயர் நீக்கப்பட்டுவிடும். ஒருவர் ஒரு ஓட்டு மட்டும்தான் போட முடியும். கள்ள ஓட்டுகள் போட முடியாது. இறந்தவர்கள் திரும்ப வர முடியாது. தற்போது அது இல்லை என்பதால் திருடனுக்கு தேள் கொட்டியது போல உணர்வு இருக்கும். வரும் காலத்தில் தோல்வி உறுதியானதால் வானத்திற்கும், பூமிக்கும் குதிக்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

# பா.ஜனதாவின் 'சி டீம்'தான் த.வெ.க. அமைச்சர் ரகுபதி



சென்னை, நவ.26

புதுக்கோட்டையில் தமிழக இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

த.வெ.க. தலைவர் விஜய் ஆச்சரிய குறி, தற்குறி என எந்த குறியாக இருந்தாலும் எங்களுக்கு கவலை இல்லை. எங்களுடைய இலக்கு தேர்தல் குறி. யாரைகண்டும் அஞ்ச வேண்டிய அவசியம் தி.மு.க.வுக்கு இல்லை. எங்களுக்கு போட்டி என்று யாரும் இல்லை.

களத்தில் இருக்கக்கூடிய எல்லோரையும் நாங்கள் சமமாகத்தான் பார்க்கிறோம். தமிழகத்தை வாழ வைக்க தி.மு.க.வால்தான் முடியும். த.வெ.க. என்பது பா.ஜனதாவின் 'சி டீம்' தான். ஒரு காலத்தில் ஸ்லீப்பர் செல்களாக இருந்தவர்கள் இன்று அரசியல் களத்திற்கு வந்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திண்டுக்கல்: தம்பதியை கட்டிப்போட்டு நகை பணம் கொள்ளை




திண்டுக்கல், நவ.26

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள கள்ளிமந்தையம் தும்பச்சிபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் கருப்புச்சாமி (வயது 50). இவரது மனைவி ராஜலட்சுமி. இவர்களது மகளுக்கு திருமணமாகி அவர் தனியாக வசித்து வருகிறார். மகன் சென்னையில் தங்கி, நிதி நிறுவனம் நடத்தி வருகிறார். ஒட்டன்சத்திரம் தாராபுரம் பைபாஸ் சாலை பகுதியில் உள்ள தோட்டத்து வீட்டில் கருப்புச்சாமி தனது மனைவியுடன் வசித்து வந்தார்.

நேற்று இரவு தம்பதி வீட்டின் வெளியில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். அப்போது முகமூடி அணிந்த 3 மர்ம நபர்கள் திடீரென்று வந்து தம்பதியினரை கத்தியை காட்டி மிரட்டி வீட்டுக்குள் அழைத்துச் சென்று கட்டிப்போட்டுவிட்டு பீரோவில் இருந்த 18 பவுன் நகைகளையும், ரூ.38 ஆயிரத்தையும் கொள்ளையடித்தனர். அதன்பின்பு தம்பதியினரின் செல்போன்களையும் பறித்துக் கொண்டு மோட்டார்சைக்கிளில் ஏறி தப்பிச் சென்றனர். இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருப்பரங்குன்றம் மலை உச்சி வக்பு வாரியத்துக்கு சொந்தம் என்பதா? நீதிபதி அதிருப்தி



மதுரை, நவ.26

மதுரை மாவட்டம் எழுமலையை சேர்ந்த ராம ரவிக்குமார், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "திருப்பரங்குன்றம் மலை தொடர்பான வழக்கில், அந்த மலையின் உச்சியில் கார்த்திகை தீபத்தை ஏற்ற அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் இந்த ஆண்டு கார்த்திகை திருவிழாவை முன்னிட்டு, மலையின் உச்சியில் உள்ள தீபத்தூணுக்கு பதிலாக பிள்ளையார் கோவில் தீப மண்டபத்தில் கார்த்திகை தீபத்தை ஏற்ற முடிவு செய்யப்பட்டு உள்ளது.

இதன்மூலம் பாரம்பரிய வழக்கத்தை தவிர்ப்பது ஏற்கத்தக்கதல்ல. இதுதொடர்பான உத்தரவை ரத்து செய்து, திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார். இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்த ஐகோர்ட்டு, இந்த வழக்கு தொடர்பாக அறநிலையத்துறை கமிஷனர் பதில் மனு தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டது.

கடந்த வாரம் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், திருப்பரங்குன்றம் மலை மீது ஏறி, நேரில் ஆய்வு செய்திருந்தார். இதற்கிடையே இந்த விவகாரத்தில் மேலும் சிலர் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் அனைத்தும் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது திருப்பரங்குன்றம் மலையின் மீது உள்ள சிக்கந்தர் தர்கா சார்பில் ஆஜரான வக்கீல், இந்த வழக்கில் வக்பு வாரியத்தையும் எதிர் மனுதாரராக சேர்க்க வேண்டும் என்றார்.

பின்னர் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வக்கீல்கள், 1947ம் ஆண்டு ஒரு வழிபாட்டுத்தலம் எந்த நிலையில் இருந்ததோ, அதே நிலையிலேயே பராமரிக்கப்பட வேண்டும். எனவே ஏற்கனவே எந்த இடத்தில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டதோ, அதே இடத்தில் ஏற்றுவது அவசியம். இது தொடர்பாக உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என வாதாடினார்கள்.

மற்றொரு தரப்பு வக்கீல்கள், தமிழக சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் இந்த விவகாரம் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தலாம் என்ற அச்சம் நிலவுகிறது என்றனர். அதற்கு நீதிபதி, தேர்தலுக்கும், இந்த விவகாரத்துக்கும் எந்த தொடர்பும் இல்லையே என்றார். இன்னொரு தரப்பு வக்கீல்கள் வாதிடும்போது, திருப்பரங்குன்றம் மலை உச்சியானது தர்காவை சேர்ந்ததுதான் என்று தெரிவித்து இருந்தனர்.

அதற்கு, அங்கு பல்வேறு உச்சிகள் இருக்கிறதே, எந்த உச்சி என்ற முடிவுக்கு எப்படி வரமுடியும்? என நீதிபதி அதிருப்தி தெரிவித்தார். விசாரணை முடிவில் இந்த வழக்கில் வக்பு வாரியத்தை எதிர்தரப்பாக சேர்ப்பதாகவும், அவர்களும் அறநிலையத்துறை அதிகாரிகளும் உரிய பதிலை தெரிவிக்க வேண்டும் என உத்தரவிட்டு, விசாரணையை வருகிற 27ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# ஊட்டி: ஆடு மேய்த்துக் கொண்டிருந்த பெண்ணை கொன்ற புலியை தேடும் பணி தீவிரம்



ஊட்டி, நவ.26

நீலகிரி மாவட்டம் மசினகுடி ஊராட்சிக்கு உட்பட்ட மாவனல்லா பகுதியை சேர்ந்தவர் பாலன். இவருடைய மனைவி நாகியம்மாள் (வயது 69). இவர் நேற்று காலை தனது வீட்டில் இருந்து சற்று தொலைவில் உள்ள ஆற்று கால்வாய் ஓரத்தில் மாடுகள் மேய்க்க சென்றார்.

இதற்கிடையில் மதியம் 1.30 மணியளவில் அங்குள்ள புதர்களுக்கு இடையே பெண் ஒருவரை புலி ஒன்று கவ்வி செல்வதை அதே பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவர் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அவர் ஊருக்குள் ஓடிச்சென்று தான் கண்ட காட்சியை பொதுமக்களிடம் கூறினார்

அதே சமயத்தில், மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்து சென்ற நாகியம்மாளையும்காணவில்லை. இதனால் அங்கு பரபரப்பு தொற்றிக்கொண்டது. இதையடுத்து பொதுமக்கள் மற்றும் வனத்துறையினர், போலீசாரை வரவழைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். நீண்ட நேர தேடுதலுக்கு பிறகு அங்குள்ள புதர் மறைவில் புலி ஒன்று உறுமும் சத்தம் கேட்டது. அருகில் சென்றபோது, புலி அங்கிருந்து ஓட்டம் பிடித்தது.

உடனே புதருக்குள் சென்று பார்த்தனர். அங்கு தலை துண்டிக்கப்பட்ட நிலையில் நாகியம்மாள் பிணமாக கிடந்தார். அவரை புலி அடித்துக் கொன்று உள்ளது.

பின்னர் நாகியம்மாளின் உடலை போலீசார் மற்றும் வனத்துறையினர் மீட்டு அங்கிருந்து கொண்டு செல்ல முயன்றனர். அதை தடுத்த பொதுமக்கள் புலியை உடனடியாக பிடிக்க வேண்டும், எங்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனக்கோரி திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். கூடலூர் போலீஸ் துணை சூப்பிரண்டு வசந்தகுமார் மற்றும் அதிகாரிகள் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதில், முதற்கட்டமாக கேமராக்கள் பொருத்தி புலி நடமாட்டம் கண்காணிக்கப்படும், அதன்பிறகு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. இதை ஏற்று பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டனர். மேலும் அந்த பகுதியில் வனத்துறையினர் 20 இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தி, தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து மசினகுடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வன்முறையாளர்களின் புகலிடமாக தமிழ்நாடு மாறி வருகிறது . ஓ.பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு



சென்னை, நவ.26

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, மணல் கடத்தல், ரேஷன் அரிசி கடத்தல், போதைப் பொருட்கள் விற்பனை, கள்ளச்சாராய விற்பனை என பல சட்ட விரோதச் செயல்கள் தமிழ்நாட்டில் கொடிகட்டிப் பறக்கின்றன. இதன் விளைவாக, வன்முறையாளர்களின் புகலிடமாக தமிழ்நாடு மாறிக் கொண்டு வருகிறது.

2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்பதற்கு முன்பே, தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் மணலை அள்ளிச் செல்லலாம், எந்த அதிகாரியும் தடுக்கமாட்டார்கள் என்று முன்னாள் அமைச்சர் ஒருவர் சொன்னதை தமிழக மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

2024 ஆம் ஆண்டு அமலாக்கத் துறை மேற்கொண்ட ஆய்வில் 28 குவாரிகளில் 987 எக்டேர் பரப்புக்கு சட்ட விரோதமாக மணல் அள்ளப்பட்டு இருந்ததும், அதன் மதிப்பு 4,730 கோடி ரூபாய் என்றும், ஆனால் தமிழ்நாடு அரசுக்கு வெறும் 36 கோடி ரூபாய் மட்டுமே வருமானமாக கிடைத்ததாகவும் தெரிய வந்துள்ளது. அதாவது, 4,700 கோடி ரூபாய் அளவுக்கு சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது அமலாக்கத் துறையால் கண்டுபிடிக்கப்பட்டு, இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு காவல் துறை தலைமை இயக்குநருக்கு அமலாக்கத் துறை கடிதம் எழுதியது. ஆனால், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் இருந்து வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், கரூர் மாவட்டம், அமராவதி ஆற்றுப் பள்ளத்தாக்கில் மணல் குவாரிகள் அமைக்கக்கூடாது என சென்னை ஐகோர்ட்டு மதுரை கிளை உத்தரவிட்டுள்ள நிலையில் இரவு நேரங்களில் மணல் அள்ளப்படுவதாகவும், ஆற்றில் குறைந்த அளவு தண்ணீர் செல்வதைப் பயன்படுத்தி கரூர் மாவட்டத்தில் ராஜபுரம், சின்ன தாராபுரம், அணைப்பாளையம், சுக்காலியூர், பெரிய ஆண்டாங்கோவில், கோயம்பள்ளி ஆகிய பகுதிகளில் மணல் திருட்டு அமோகமாக நடைபெற்று வருவதாகவும், இந்த மணல் திருட்டை காவல் துறையினரும், வருவாய்த்துறையினரும் கண்டு கொள்வதில்லை என்றும், செய்திகள் வருகின்றன.

அரசு அதிகாரிகள் இதைக் கண்டுகொள்ளாததிலிருந்தே ஆளும் கட்சியினரின் தலையீடு இருக்கிறதுஎன்பதுதெளிவாகிறது. இது நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் செயல். மணல் கொள்ளை தொடர்ந்து நடைபெறுவதன்மூலம் நிலத்தடி நீர் குறைந்து, பொதுமக்கள் தண்ணீருக்கு அல்லல்பட வேண்டிய அவல நிலையும் உருவாகும். தமிழ்நாட்டில் நடைபெறும் மணல் கொள்ளையைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் தி.மு.க. அரசுக்கு உண்டு.

எனவே, முதல்அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி மணல் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும், மணல் திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடர் மழையால் தென்காசி மாவட்டத்தில் நிரம்பி வழியும் அணைகள்



தென்காசி, நவ.26

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. இதன் காரணமாக நெல்லை, தென்காசி, மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டங்களில் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன.

சேர்வலாறு அணையில் இருந்து மின் உற்பத்தி செய்யக்கூடிய மதகு வழியாக 1,600 கனஅடி நீர், 500கனஅடி உபரிநீர், காட்டாற்று வெள்ளம் 500 கன அடி என லோயர் கேம்ப் வழியாக வினாடிக்கு சுமார் 2700 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

செங்கோட்டை அருகே கண்ணுப்புள்ளிமெட்டு பகுதியில் உள்ள குண்டாறு அணை (36.10 அடி கொள்ளளவு) நேற்று மதியம் முழு கொள்ளளவை எட்டியது. இந்த ஆண்டில் 5வது முறையாக அணை நிரம்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் அணைக்கு வரும் தண்ணீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

அதேபோல் கடையநல்லூர் அருகே உள்ள கருப்பாநதி அணை (72 அடி கொள்ளளவு) முழு கொள்ளளவை எட்டி நிரம்பியது. அணைக்கு வரும் 200 கன அடி தண்ணீர் அப்படியே கருப்பாநதி ஆற்றில் வெளியேற்றப்பட்டுள்ளது.

கடையம்அருகேமேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள ராமநதி அணை (84 அடி கொள்ளளவு) நீர்மட்டம் நேற்று காலையில் 82 அடியை எட்டி உள்ளது. அணை நிரம்பும் நிலையில்உள்ளதால்அணைக்கு வரக்கூடிய சுமார் 200 கன அடி நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அதேபோல் அடவிநயினார் அணை (132 அடி கொள்ளளவு) நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், அணைக்கு வரும் 185 கனஅடி தண்ணீர் அப்படியே வெளியேற்றப்பட்டு வருகிறது.

ஆழ்வார்குறிச்சி அருகே உள்ள கடனாநதி அணை (85 அடி கொள்ளளவு) நீர்மட்டம் 82 அடியை எட்டியுள்ளது. நீர் வரத்து சுமார் 1,300 கன அடியாக உள்ளதால், அணையில் இருந்து சுமார் 1000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இந்த உபரி நீரானது ஆழ்வார்குறிச்சி, ஆம்பூர், அடைச்சாணி, திருப்புடைமருதூர் வழியாக முக்கூடல் தாமிரபரணி ஆற்றில் கலக்கிறது. வெள்ளப்பெருக்கு அதிகரிக்க வாய்ப்புள்ளதால் அங்கு பொதுமக்கள் செல்ல வேண்டாம் எனவும், கரையோர மக்கள் எச்சரிக்கையாக இருக்கவும் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

# 'நாளைய முதல்வர்... மக்களின் முதல்வர்' திருமாவளவனை வரவேற்று வைக்கப்பட்ட பேனர்கள்




சென்னை, நவ.26

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே வாக்காளர் பட்டியல்சிறப்புதீவிரதிருத்தத்தை கண்டித்து நேற்று விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் தலைவர் திருமாவளவன் தலைமை தாங்கினார். இதில் ரவிக்குமார் எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் பனையூர் பாபு, ஆளூர் ஷானவாஸ், எஸ்.எஸ்.பாலாஜி, துணை பொதுச்செயலாளர் வன்னி அரசு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அப்போது, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை எதிர்த்து கண்டன கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் திருமாவளவன் பேசுகையில், 'தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தால் ஒரு கோடி பேர் தங்களுடைய வாக்குரிமையை பறிகொடுக்கும் நிலை ஏற்படும் என்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை மத்திய பா.ஜனதா அரசு உள்நோக்கத்தோடு பயன்படுத்துகிறது என்று கூறினார்.

சென்னையில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற திருமாவளவனை வரவேற்று விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் பேனர்கள் வைத்திருந்தனர். அதில் 'நாளைய முதல்வர்', 'மக்களின் முதல்வர்', 'களத்தில் முதல்வர்', 'சமகால முதல்வர்' போன்ற வாக்கியங்கள் அடங்கிய வாசகங்கள்

இடம்பெற்று இருந்தது. இது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ராணிப்பேட்டையில் கடந்த ஜூலை மாதம் நடந்த கூட்டத்தில் பேசிய திருமாவளவன், 'நான் முதல் அமைச்சர் பதவிக்கு தகுதி இல்லாதவனா? 25 ஆண்டுகள் தேர்தல் அரசியலில் இருக்கிறேன்' என்று கூறினார். இந்த கருத்தை அவரது தொண்டர்கள் வரவேற்றனர். இதனால், தி.மு.க. விடுதலை சிறுத்தைகள் கட்சி இடையே சற்று கருத்து வேறுபாடு நிலவியதாகவும் கூறப்பட்டது.

# 41 பேர் பலியான வழக்கு: புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜூனாவிடம் 10 மணி நேரம் சி.பி.ஐ. விசாரணை

கரூர், நவ.25

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27 ந்தேதி நடைபெற்றத.வெ.க. பிரசாரகூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும் 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதுதொடர்பான வழக்கை ஐ.பி.எஸ். அதிகாரி பிரவீன்குமார்தலைமையிலான சி.பி.ஐ. அதிகாரிகள் குழுவினர், தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலாமாளிகையில்தங்கியிருந்து விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

இதுபற்றி கரூர் கோர்ட்டில் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில், கரூர் மேற்கு மாவட்ட த.வெ.க. செயலாளர் மதியழகன், மாநில பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், இணைச்செயலாளர் நிர்மல்குமார் மற்றும் த.வெ.க.வை சேர்ந்த சிலர் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் விசாரணைக்கு ஆஜராகுமாறு புஸ்சி ஆனந்த், நிர்மல்குமார், தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா, கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன், கட்சி நிர்வாகி பவுன்ராஜ் உள்ளிட்டோருக்கு சி.பி.ஐ. சார்பில் சம்மன் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் நேற்று காலை 9.45 மணியளவில் தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகைக்கு புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, நிர்மல்குமார், மதியழகன், பவுன்ராஜ் ஆகிய 5 பேரும் காரில் வந்தனர். பின்னர் அவர்கள் சி.பி.ஐ. விசாரணைக்கு ஆஜராகினர்.

அப்போது அவர்களிடம், பிரசார கூட்டம் எத்தனை மணிக்கு தொடங்கும் என அறிவித்து இருந்தீர்கள், எத்தனை மணிக்கு விஜய் பிரசாரத்தை தொடங்கினார், கூட்டத்தில் எவ்வளவு பேர் கலந்து கொண்டனர், எவ்வளவு பேர் வருவார்கள் என்று எதிர்பார்த்து இருந்தீர்கள் என்பன உள்பட பல்வேறு கேள்விகளை எழுப்பி விசாரணை மேற்கொண்டதாக தெரியவருகிறது. அப்போது, அவர்கள் தெரிவித்த தகவல்களை சி.பி.ஐ. அதிகாரிகள் பதிவு செய்து கொண்டனர். இந்த விசாரணையானது இரவு 8.20 மணி வரை சுமார் பத்தரை மணி நேரம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

26.11.2025

# வடகிழக்கு பருவமழை: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் துரைமுருகன் ஆலோசனை



சென்னை, நவ.26

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

(24.11.2025) நேற்று தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வடகிழக்கு பருவமழையினால் தற்போது நீர்நிலைகளில் உள்ள நீர் இருப்பு நிலவரங்கள், எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்பு விவரங்கள் குறித்து அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

கடந்த சில தினங்களாக தென்மாவட்டங்களில் குறிப்பாக தென்காசி, திருநெல்வேலி,கன்னியாகுமரிமற்றும்தூத்துக்குடி மாவட்டங்களில் அதிக மழை பொழிவு காரணமாக எழுந்துள்ள நிலைமைகள் குறித்தும் அதன் காரணமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மதுரை மண்டல பொறியாளருக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கினார். மேலும் மதுரை மண்டலத்தில் வெள்ள தடுப்பிற்காக செயல்படுத்தப்பட்ட சிறப்பு தூர்வாரும் பணிகள் மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகள் நிறைவுபெற்றுள்ள பின்னர் உள்ள வெள்ள நிலைமைகள் குறித்தும் பொறியாளர்களிடம் கேட்டறிந்தார். தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நீர்தேக்கங்கள் நிரம்பியுள்ளதாலும் தாமிரபரணியில் ஏற்கனவே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாலும் எதிர்வரும் மழைப்பொழிவினை எதிர்கொள்ள தயாராக இருக்குமாறு பொறியாளர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கினார்.

திருச்சி மண்டலத்தில் நடைபெற்று வரும் வெள்ளத்தடுப்பு பணிகள், காவிரி டெல்டா மாவட்டங்களான திருவாரூர், நாகப்பட்டினத்தில் வடிகால்களில் தடையில்லாமல் நீர்செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு பணிகளை விரைவு படுத்தவும் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளார்.

வரும் வாரங்களில் மழை அதிகமாக இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதால், செயலாளர் இந்த வாரத்தில், திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதிகளுக்கு சென்று நிலைமையை ஆய்வு செய்ய கோரினார்.

பெரும் வெள்ளம் ஏற்பட்டால், நிலைமையை துரிதமாக சமாளிக்கவும், கண்காணிக்கவும், பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும் ஏதுவாக, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, டெல்டா ஆகிய பகுதிகளுக்கென்று தனித்தனி குழுக்களை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் உரிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் பெரும்மழை பொழிவினை கணக்கிற்கொண்டு தமிழகம் முழுவதும் உள்ள நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் இதர நீர்நிலைகளின் நீர் இருப்பில் முழுக்கொள்ளளவிலிருந்து 10 சதவீதம் முதல் 20 சதவீதம் வரைகொள்ளளவினை குறைத்து வைத்து நீர்நிலைகளை பாதுகாக்கவும், வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மண்டலப் பொறியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும், எதிர்பாராத வகையில் நீர்நிலைகளில் ஏற்படும் உடைப்புகளை போர்கால அடிப்படையில் சீரமைப்பதற்கு ஏதுவாக, தேவையான ஜேசிபி போன்ற கனரக இயந்திரங்களையும், மணல் மூட்டைகளையும் இருப்பில் வைத்துக்கொள்வதை அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்களும் உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாலோசனை கூட்டத்தில் அரசு செயலாளர், ஜெ. ஜெயகாந்தன், நீவது, முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது) சு.கோபாலகிருஷ்ணன், மற்றும் சென்னை மண்டல பொறியாளர்கள் தலைமைச்செயலகத்திலும் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மண்டல பொறியாளர்கள் காணொளிக்காட்சி வாயிலாகவும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்ப்பிணி பெண் தற்கொலை: அறுவை சிகிச்சை மூலம் குழந்தை உயிருடன் மீட்பு

திருச்சி திருவெறும்பூர் அருகே உள்ள பத்தாளப்பேட்டை மேட்டு தெருவை சேர்ந்தவர் பாஸ்கர் சேவியர். இவரது மனைவி ரோஸி (வயது 25). 8 மாத கர்ப்பிணியாக இருந்த இவர் குடும்ப பிரச்சினை காரணமாக எலி மருந்து விஷத்தை குடித்துள்ளார். இந்தநிலையில் அவர் வீட்டில் மயங்கி விழுந்தார். குடும்பத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். எனினும் அவரது உடல் நலம் பாதிக்கப்பட்டது. ஆனால் அவரது வயிற்றில் இருந்த குழந்தை ஆரோக்கியமாக இருந்தது. இதனையடுத்து அறுவை சிகிச்சை மூலம் குழந்தை உயிருடன் எடுக்கப்பட்டது. இதில் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் ரோஸி சிகிச்சை பலன் இன்றி பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 10, 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு "எளிய கற்றல் கையேட்டினை" வழங்கினார் மேயர் பிரியா



சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

மேயரின் 202526ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், சென்னை பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர் அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் மற்றும் அதிக தேர்ச்சி விகிதம் பெற ஏதுவாக பாடங்களை எளிதான முறையில் தயார்செய்து, வினா/விடை தொகுப்பு முறையில் "எளிய கற்றல் கையேடு" (Easy Learning Materials) வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. சென்னை பள்ளிகளில் பொதுத் தேர்வு எழுதும் அனைத்து மாணவ, மாணவியரும் நல்ல மதிப்பெண்கள் பெறுவதுடன், கற்றல் திறன் குறைவாக உள்ள மாணவ, மாணவியர் கூடுதல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறவும் வாய்ப்பாக அமையும். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், இணை ஆணையாளர் (கல்வி) க. கற்பகம், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், மாமன்ற உறுப்பினர் எ.ஆர்.ஆர்.மலைச்சாமி, கல்வி அலுவலர்கள், உதவி கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (26.11.2025)

**மேஷம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

**ரிஷபம்:** உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

**மிதுனம்:** சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

**கடகம்:** வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**கன்னி:** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

**துலாம்:** புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

**விருச்சிகம்:** உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.

**தனுசு:** வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

**மகரம்:** அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

**மீனம்:** மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# சென்னையில் மாடு முட்டி முதியவர் உயிரிழப்பு



சென்னை நவ.26

சென்னை மணலியை அடுத்த மாத்தூர் பகுதியை சேர்ந்தவ முதியவர் ஆனந்தன். இவர் கடந்த நாட்களுக்குமுன் தெருவில் நடந்து சென்றபோது அவரை மாடு முட்டியது. இதில் கீழே விழுந்து அப்டுகாயமடைந்த ஆனந்தனை மீட்ட அக்கம்பக்கத்தினர் அவரை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஆனந்தன் இன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனிடையே, மாத்தூர் பகுதியில் சாலையில் சுற்றித்திரிந்த மாடுகளை மாநகராட்சி ஊழியர்கள் விரட்டிப்பிடித்தனர். அப்போது மாடுகளின் உரிமையாளர்கள் மாநகராட்சி ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். சாலையில் சுற்றி திரியும் மாடுகளின் உரிமையாளர்களுக்கு ரூ. 10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்ட போதிலும் மாடுகளை அவர்கள் தொடர்ந்து சாலைகளிலேயே விடுவதாக மாநாகராட்சி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

# மஹத்திற்கு ஜோடியாகும் ஐஸ்வர்யா ராஜேஷ்



நடிகர் மஹத் ராகவேந்திரா, மங்காத்தா. ஜில்லா, அன்பானவன் அடங்காதவன் அசராதவன், மாநாடு போன்ற பல படங்களில் நடித்துள்ளார். சில படங்களில் ஹீரோவாகவும் நடித்துள்ளார். இருப்பினும், அவற்றில் எதுவும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

சிறிது இடைவெளி எடுத்த மஹத் ராகவேந்திரா, தற்போது தனது புதிய படத்திற்கு தயாராகி வருகிறார். சமீபத்தில் சிக்ஸ் பேக் உடலுடன் அவரது புகைப்படம் இணையத்தில் வைரலானது.

மஹத் தற்போது ஒரு படத்தில் ஹீரோவாக நடிக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ் கதாநாயகியாக நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது. ரம்யா கிருஷ்ணன் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளதாகவும், படப்பிடிப்பு டிசம்பர் இரண்டாவது வாரத்தில் தொடங்கும் என்றும் கூறப்படுகிறது. இந்தப் படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிபார்க்கப்படுகிறது.



# வாட்ஸ்அப் ஆள்மாறாட்டம் ரசிகர்களை எச்சரித்த ரகுல் பிரீத் சிங்

தற்போது பிரபலங்களின் பெயரில் சிலர் போலி சமூக ஊடக கணக்குகளை உருவாக்கி மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமீபத்தில்நடிகைஅதிராவ் மற்றும் ஸ்ரேயாசரண் ஆகியோரின் பெயரில் வாட்ஸ் அப்பில் போலி கணக்குகளை உருவாக்கி மோசடியில் ஈடுபட்டிருந்தனர். இதற்கு நடிகைகள் அது தங்களுடைய நம்பர் இல்லை, எனவும் அதை நம்ப வேண்டாம் எனவும் தெளிவுப்படுத்தி இருந்தனர்.

இந்நிலையில், நடிகைரகுல்பிரீத்சிங்எல்ஸ்பக்கத்தில்தனதுவாட்ஸ்அப் எண் என்று கூறி ஒரு போலி எண்ணைப் பயன்படுத்தி அரட்டை அடிப்பதாக பதிவிட்டுள்ளார்.

அதில், 'வணக்கம் நண்பர்களே...யாரோ ஒருவர் என்னைப் போல வாட்ஸ்அப்பில் ஆள்மாறாட்டம் செய்வது என் கவனத்திற்கு வந்துள்ளது. இது என்னுடைய எண் அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். யாரும் உரையாடல்களிலும் ஈடுபட வேண்டாம். தயவுசெய்து பிளாக் செய்யுங்கள்' இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

# ஓடிடியில் வெளியாகும் சசிவதனே...எதில் எப்போது பார்க்கலாம்?



ரக்க்சித் மற்றும் கோமலி பிரசாத்ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்த 'சசிவதனே' திரைப்படம் தற்போது ஓடிடியில் வெளியாக உள்ளது.

பலமுறை ஒத்திவைக்கப்பட்ட இந்தப் படம், கடந்த மாதம் 10 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இது பெரிய அளவில் பார்வையாளர்களைச் சென்றடையவில்லை. வெளியான சில நாட்களுக்குள் காணாமல் போனது.

இந்நிலையில், சுமார் ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு, இப்படம் இப்போது ஓடிடியில் வெளியாக உள்ளது. அதன்படி, வருகிற 28ம் தேதி முதல் சன் நெக்ஸ்டில் ஸ்டிரீமிங் ஆக இருக்கிறது.

# தேரே இஷ்க் மே என்னை ரொம்ப பாதித்தது கிரித்தி சனோ

தேரே இஷ்க் மே பட அனுபவத்தைப் பற்றி கிரித்தி சனோன் மனம் திறந்து பேசியுள்ளார். இது அவரது கெரியரில் மிகவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாதித்த படங்களில் ஒன்று என்று கூறினார்.



படத்தில் தனது கதாபாத்திரம் உணர்ச்சி ரீதியாக ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தியது என்றும், படப்பிடிப்பு முடிந்தும் வாரக்கணக்கில் அது தன்னிடம் இருந்ததாகவும் கிரித்தி கூறினார்.

கிரித்தியின் இந்த கருத்து ஆர்வத்தை அதிகரித்துள்ளது. அவரது கதாபாத்திரத்தை காண ரசிகர்கள் ஆர்வமாக உள்ளனர். தனுஷ் கதாநாயகனாக நடித்துள்ள இப்படம் வருகிற 28 ம் தேதி வெளியாகிறது.

# இந்திய அணி வீரர்கள் மீது அஸ்வின் அதிருப்தி




இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி அசாம் மாநிலம் கவுகாத்தியில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த தென் ஆப்பிரிக்க அணி முதல் இன்னிங்சில் 489 ரன்கள் குவித்த நிலையில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக முத்துசாமி 109 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார். பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி தென் ஆப்பிரிக்க பந்து வீச்சாளர் மார்கோ ஜான்சனின் வேகத்தில் விக்கெட்டுகளை இழந்தது. 83.5 ஓவர்கள் தாக்குப்பிடித்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 201 ரன்களில் ஆல் அவுட் ஆகி பாலோ ஆன் ஆனது.

இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 58 ரன்களும், வாஷிங்டன் சுந்தர் 48 ரன்களும் அடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் மார்கோ ஜான்சன் 6 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார். இருப்பினும் இந்திய அணிக்கு பாலோ ஆன் வழங்காத தென் ஆப்பிரிக்க அணி 288 ரன்கள் முன்னிலை பெற்ற நிலையில் 2வது இன்னிங்சில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது.

அதன்படி 2வது இன்னிங்சை தொடங்கிய தென் ஆப்பிரிக்க அணி 8 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 26 ரன்கள் அடித்திருந்தபோது போதிய வெளிச்சமின்மையால் 3வது நாள் ஆட்டம் முன்கூட்டியே முடித்து கொள்ளப்பட்டது. மார்க்ரம் 12 ரன்களுடனும், ரிக்கல்டன் 13 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

4வது நாள் ஆட்டம் நடைபெற்று வருகிறது. தென் ஆப்பிரிக்கா அணி தேநீர் இடைவேளை வரை 3 விக்கெட் இழப்பிற்கு 107 ரன்கள் எடுத்துள்ளது. தென் ஆப்பிரிக்கா அணியில் ரிக்கல்டன் 35 ரன்களும் , மார்க்ரம் 29 ரன்களும் , பவுமா 3 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர் . இந்திய அணியில் ஜடேஜா 2 விக்கெட் வாஷிங்டன் சுந்தர் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இந்த நிலையில் இந்திய அணி வீரர்கள் மீது முன்னாள் வீரர் அஸ்வின் அதிருப்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

2வது இன்னிங்ஸில் பேட்டிங் செய்யும்போது இந்திய அணி மீண்டு வரும் என்று நம்புகிறேன். ஆனால், களத்தில் நமது வீரர்களின் உடல் மொழியை பார்க்கையில் எதுவும் சரியாக இல்லை.என தெரிவித்துள்ளார் .



# சென்னையில் ஆசிய கோப்பை சைக்கிளிங் போட்டி

ஆசிய டிராக் கோப்பைக்கான சர்வதேச சைக்கிளிங் போட்டி ஜனவரி 29ந்தேதி முதல் 31ந்தேதி வரை சென்னையை அடுத்த மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்தில் நடக்கிறது. இந்தியாவில் முதல்முறையாக நடக்கும் இந்த போட்டியில் இந்தியா, ஹாங்காங், மலேசியா, ஈரான், சீனா, தாய்லாந்து, சிங்கப்பூர் உள்பட 15 நாடுகளை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் களம் இறங்குகிறார்கள்.

இந்த போட்டிக்கான இலச்சினையும், தீரன் எனும் பிரத்யேக சின்னமும் சென்னையில் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, எஸ்.டி.ஏ.டி. உறுப்பினர் செயலாளர் மேகநாதரெட்டி, இந்திய சைக்கிளிங் சம்மேளன பொதுச் செயலாளர் மணீந்தர்பால் சிங், தமிழக சங்க தலைவர் சுதாகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஜூனியர் உலகக் கோப்பை ஆக்கி: அனைத்து ஏற்பாடுகளும் தயார்...தமிழக அரசு அறிவிப்பு

14வது ஜூனியர் உலகக் கோப்பை ஆக்கி போட்டி (21 வயதுக்கு உட்பட்டோர்) சென்னை மற்றும் மதுரையில் வருகிற 28ந் தேதி முதல் டிசம்பர் 10ந் தேதி வரை நடக்கிறது. இதில் நடப்பு சாம்பியன் ஜெர்மனி, இந்தியா, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து, இங்கிலாந்து, பெல்ஜியம், தென்கொரியா உள்பட 24 அணிகள் கலந்து கொள்கின்றன. அவை 6 பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் மோதுகின்றன. இதில் இந்திய அணி 'பி' பிரிவில் இடம் பிடித்துள்ளது. இந்திய அணி தனது முதலாவது ஆட்டத்தில் சிலியையும், (நவ.28), 2வது ஆட்டத்தில் ஓமனையும் (நவ.29) சென்னையில் சந்திக்கிறது. 3வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தை (டிச.2) மதுரையில் எதிர்கொள்கிறது. ஜூனியர் உலகக் கோப்பை போட்டியில் அதிக அளவில் அணிகள் பங்கேற்பதும், அதிக ஆட்டங்கள் அரங்கேறுவதும் இதுவே முதல்முறையாகும். சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் 41 ஆட்டங்களும், மதுரை ரேஸ்கோர்சில் அமைக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டரங்கில் 31 ஆட்டங்களும் நடைபெறுகின்றன. கால்இறுதியில் இருந்து எல்லா ஆட்டங்களும் சென்னையில் நடக்கிறது. இந்த போட்டியை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது. இந்த போட்டிக்காக நியூசிலாந்து அணி நேற்று சென்னை வந்தடைந்தது. இதுவரை 21 அணிகள் வந்துள்ளன. எஞ்சிய ஜப்பான், சிலி அணிகள் இன்றும், சீன அணி நாளையும் வருகின்றன. போட்டிக்காக சென்னை மற்றும் மதுரையில் உள்ள ஸ்டேடியங்களில் இறுதி கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் இருக்கின்றன. போட்டி நடக்கும் சென்னையில் உள்ள மேயர் ராதாகிருஷணன் ஸ்டேடியத்தை நேற்று மாலை துணை முதல்அமைச்சர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்ததுடன், ரசிகர்களுக்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் குறித்து அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி போட்டி நடைபெறும் இடங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். ஸ்டேடியம் முழுவதும் கண்காணிப்பு கேமரா வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டு பிரத்யேக போலீஸ் கட்டுப்பாட்டு அறை மூலம் கண்காணிக்கப்படும். மேலும் சாதாரண உடை அணிந்த போலீசாரும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். ரசிகர்கள் சோதனைக்கு பிறகே ஸ்டேடியத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள். ஸ்டேடியத்தை சுற்றி 10 இடங்களில் பார்வையாளர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.